25th October 1971]

திரு. எஸ். முத்துசாமி : ஊக்க ஊதிய உயர்வு என்பது பி.ஏ., பி.டி. பெற்றவர்களுக்கும் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும் மட்டும்தானு, ஹையர்கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்து எம்.ஏ. படித்தால் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கும் அந்த ஊதிய உயர்வு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும். இப்போது பி.டி. படித்தவர்களுக்குத்தான் ஊக்க ஊதிய உயர்வு தருகிற முறை இருக்கிறது. செகண்டரி கிரேடு படித்து எம்.ஏ. படித்தால் அதற்கு ஊதிய உயர்வு இருக்கிறதா என்பதை அறிய தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். முத்துசாமி : அதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விண்ணப்பம் வந்தால், ஆராய்ந்து முடிவே மேற்கொள்ளலாம்

திரு. எஸ். முத்துசாமி : ஏற்கனவே மதுரை மகாநாட்டில் கலந்துகொண்டபோது கல்வி-உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் இன்சென்டிவ் இங்கிரிமெண்ட் பற்றி முடிவெடுக்கப்படும் என்று கூறியிருப்பதாலும், இதுவரை இல்லாமல் இருப்பதாலும், அதை அரசு கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

Project Allowance

* 15 @ *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Agriculture Department Ministerial Association, Nilgiris Centre, Ootacamund has requested the Government for the grant of project allowance; and

(*b*) if so, the action taken thereon?

திட்ட படி

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதகையிலுள்ள, நீலகிரி வட்ட, தமிழ்நாடு வேளாண்மைத் துறை நிலைப் பணியாளர் சங்கம் திட்டப்படி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

---

a Postpond from the List of questions for 22nd October 1971.

[25th October 1971

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) இது போன்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால் நீலகிரி மாவட்ட (உதகமண்டலம்) தமிழ்நாடு, வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்திலிருந்து " திட்டப்படி " (Project allowance) அளிக்கும்படி கேட்டு ஒரு கோரிக்கை வந்துள்ளதாகவும் அக்கோரிக்கை தன் பரிசீலனையிலிருப்பதாகவும், வேளாண்மை இயக்குநர் கூறியிருக்கிறார்.

Soil Testing Laboratory at Ooty.

* 16 @ Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to open Soil Testing Laboratory at Ootacamund by the Indo-German Development Project; and

(b) if so, the details thereof?

உதகை மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதக மண்டலத்தில் இந்தோ-ஜெர்மானிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஏற்கனவே உதகையில் இந்திய ஜெர்மானிய உதகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு மண் பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. மற்றுமொரு நிலையம் ஆரம்பிப்பது பற்றி மேற்படி திட்ட அதிகாரிகளிடமிருந்து செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

State Seed Farms.

* 17 @ Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that a number of State Seed Farms are working at a loss;

(b) if so, the names of such seed farms; and

(c) the loss so far incurred by each one of them?

@ Postponed from the list of Questions for 22nd October 1971.